| **ஆரம்ப காலப்பகுதியிலுள்ள காசும் காசுக்கு சமமானவையும்** | **15,354** | **21,765** |
| **இறுதிக் காலப்பகுதியிலுள்ள காசும் காசுக்கு சமமானவையும்** | **52,317** | **15,354** |

## கணக்குகளுக்கான குறிப்புக்கள்

### 1. ஒருங்கிணைந்த தகவல்கள்

**1.1** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 1950 ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம்173) என்பனவற்றினை இரத்துச் செய்து அவற்றிற்குப் பதிலாக ஆக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதாகும்.

2011 செப்ரெம்பர் 15 ஆம் திகதிய PED/58/02 ஆம் இலக்கத்தினைக் கொண்ட பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின்படி, ஒழுங்குமுறைப்படுத்தல் முகவராண்மைகளின் உப பிரிவு "அ" இன் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது வகையீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2. முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

அதிகாரசபையின் முதன்மைச் செயற்பாடு பாவனையாளர்களைப் பாதுகாப்பதும் வர்த்தக செயற்பாடுகளினை ஒழுங்குமுறைப்படுத்துவதுமேயாகும்.

**1.3** 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அதிகாரசபையின் ஊழியர்களின் எண்ணிக்கை 383 ஆகும்.

### 1.4 முக்கியத்துவம் வாய்ந்த பங்குகளை வைத்திருத்தல் (பங்குடமை) / உரிமைப் பங்கு

பவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்குத் திறைசேரியே பிரதான நிதியுதவியினை வழங்கி வருகின்றது. அதிகாரசபைக்கான நேரடி வருமானமாகவிருக்கின்ற தண்டப்பண வருமானத்தின் 1/3 இனால் தாபிக்கப்படுகின்ற நிதியத்தின் தேறிய மீதியானது, அதிகாரசபையின் உரிமைப் பங்கிலும் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது.

### 1.5. அரசாங்க மானியங்கள்

அரசாங்க மானியங்களானவை மானியம் பெற்றுக் கொள்ளப்படுமென்ற நியாயமான உறுதிப்படுத்தலின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. செலவின விடயத்துடன் மானியம் தொடர்புபடுகின்ற போது, குறித்த ஆண்டுக்கான வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. சொத்துடன் மானியம் தொடர்புபடுகின்ற போது குறித்த சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலத்திற்கு மேற்பட்ட சமமான தொகைகளில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நாணயமல்லாச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் போது, சொத்து மற்றும் மானியம் என்பன பெயரளவிலான தொகைகளில் பதிவு செய்யப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களினால் மறைமுகமான பயன்களைப் பெறுகின்ற வடிவில் எதிர்பார்க்கப்படும் பாவனைக் காலத்தினைக் காட்டிலும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் விடுவிக்கப்பட்டு பெயரளிலான தொகைகளில் பதிவு செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியிலான சொத்துக்கள் மற்றும் நாணயமல்லா மானியங்களுடன் தொடர்புடைய அரசாங்க மானியங்கள் நீடித்த வருமானமாக ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நாணயமல்லாச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் போது, சொத்து மற்றும் மானியம் என்பன பெயரளவிலான தொகைகளில் பதிவு செய்யப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களினால் மறைமுகமான பயன்களைப் பெறுகின்ற வடிவில் எதிர்பார்க்கப்படும் பாவனைக் காலத்தினைக் காட்டிலும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் விடுவிக்கப்பட்டு பெயரளிலான தொகைகளில் பதிவு செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியிலான சொத்துக்கள் மற்றும் நாணயமல்லா மானியங்களுடன் தொடர்புடைய அரசாங்க மானியங்கள் நீடித்த வருமானமாக ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

**2.1** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் (CAA) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தின் அரச துறை கணக்கீட்டு நியமங்கள் குழுவினால் வழங்கப்பட்ட இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுடன் (SLPSAS) இணங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2** நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றத்திற்கான சாத்தியமான அங்கீகாரத்தின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.3 தண்டப் பண வருமானம்

**2.3.1** தண்டப் பண வருமானத்திலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் அதிகாரசபையின் பொது செயற்பாடுகளுக்கு உபயோகிக்கப்படாமையினால், முன்னர் அது வருமானக் கூற்றில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. 2011 ஆம் ஆண்டிலிருந்து பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இந்த வருமானத்தினை உபயோகித்து வருகின்றது. எனவே, தண்டப்பண வருமானம் வருமானமாக கருதப்பட்டு அதனுடன் தொடர்புடைய அனைத்து செலவினங்களும் வருமானங்களும் நிதிச் செயலாற்றுக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

**2.3.2** அதிகாரசபையானது தண்டப்பணத்தினை வருமானமாகப் பெற்றுக் கொள்ளும் சில சந்தர்ப்பங்களும் உள்ளன. மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் திடீர் சோதனைகளினை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட எண்ணிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் தமது அனுப்புகைகளில் வழங்கிய எண்ணிக்கைக்குமிடையில் (தகவல்) வேறுபாடுகள் உள்ள அதேவேளையில் அவ்வருமானம் அங்கீகரிக்கப்படாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. அவை உண்மையில் அதிகாரசபைக்கு உரித்தானவையா அல்லது நீதிமன்றத்தினால் தவறுதலாக அனுப்பி வைக்கப்பட்டவையா என்பதனை பரிசீலிக்கும் நோக்குடன் பொதுவாக தொங்கல் – தண்டப்பண வருமானக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. அத்தகைய பணம் அடுத்த வருட முடிவு வரையில் அங்கீகரிக்கப்படாத ஒன்றாக இருப்பின் அது அதிகாரசபையின் பாவனையாளர் பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைக்கப்படும்.

**2.3.3** கடந்த கால அநுபவங்களின் அடிப்படையில், அடையாளங் காணப்பட்ட தண்டப்பங்களில் பெரும்பாலானவை பெறத்தக்க தண்டப்பணங்களினைப் பிரதிபலிப்பதனை அவதானிக்க முடிந்துள்ளது.

### 2.4 நிதியாண்டு

அதிகாரசபையின் நிதியாண்டானது ஒவ்வொரு கலண்டர் ஆண்டினதும் டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைகின்றது.

## 3. சொத்துக்களும் அவற்றின் பெறுமதி மதிப்பும்

### 3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**3.1.1.** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த அதன் கணக்கீட்டுக் கொள்கையான கிரய மாதிரியினைத் தெரிவு செய்கின்றது**.** (SLPSAS 7)

**3.1.2** ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பனவற்றின் ஆக்கக்கூறு பாகங்களினைப் பிரதியீடு செய்தல் அடங்கலான தேறிய திரண்ட தேய்மானமானம், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன கொள்விலையில் கூறப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முக்கிய பகுதி பிரதியீடு செய்யப்படும் போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, பிரதியீடு செய்யப்பட்ட பகுதியினை அங்கீகரிக்காது புதிய பகுதியின் தொடர்புடைய பயன்பாட்டுக் காலம் மற்றும் தேய்மானம் என்பவற்றினை அங்கீகரிக்கின்றது. பழுதுபார்த்தல் மற்றும் பேணுகைச் செலவுகள் என்பன நிகழ்ந்ததாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஏதேனும் மீள் மதிப்பிடல் மிகையானது சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்களிலுள்ள உரிமைப்பங்கில் திரட்டி வைக்கப்படுவதனை அங்கீகரிக்கின்றது.

**3.1.3** ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஆகு செலவு / கிரயம் என்பது அதன் பாவனை நோக்கத்திற்காக தொழிற்படு நிலையில் அச்சொத்தினைக் கொண்டு வருவது தொடர்பில் ஏற்பட்ட ஏதேனும் செலவுகளுடனான கொள்வனவுகள் அல்லது நிருமாணத்தின் கொள்விலையினைக் குறிப்பிடுகின்றது.

**3.1.4** சொத்துக்களின் பாவனைக் காலத்தினை அதிகரிப்பதற்கு அல்லது வியாபார நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் வகையில் நிரந்தர அடிப்படையில் சொத்துக்களின் கொள்ளல், விரிவாக்கல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக ஏற்பட்ட செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்படுகின்றது.

**3.1.5 குறைவேலை**

இது மென்பொருள் விருத்தி மற்றும் அமுலாக்கம் என்பவற்றிற்கு செலவிடப்பட்ட தொகையினைப் பிரதிபலிப்பதுடன் அவை பின்வருமாறு

| | மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு (ரூபா.) | பூர்த்தியடைந்த வேலை (ரூபா.) (குறைவேலை) | 31.12.2017 இலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டிய / சான்றுப்படுத்த வேண்டிய மீதி (ரூபா.) |
|---|---|---|---|
| HR பொதி | 165,000.00 | 121,250.00 | 43,750.00 |
| **மொத்தம்** | **165,000.00** | **121,250.00** | **43,750.00** |

**3.2 தேய்மானம்**

கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் சொத்து பாவனைக்குட்படுத்தப்படும் மாதத்திலிருந்து ஆரம்பமாகும் வகையில் அதிகாரசபையினால் தேய்மானமிடப்படுகின்றது

**3.2.1** தேய்மானமானது நிலையான அடிப்படையில் அளிக்கப்படுவதுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் கொள்விலையில் பின்வரும் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கெதிராக பின்வரும் வீதாசாரத்தில் பதிவளிப்புச் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| அலுவலக தளபாடங்களும் பொருத்துக்களும் | 10% |
| அலுவலக உபகரணம் | 10% |
| கணனி உபகரணம் | 20% |
| கணனி மென்பொருள் மற்றும் இணைய வடிவமைப்பு (கற்பனைச் சொத்து) | 20% |
| மோட்டார் வாகனம் | 20% |
| அலவலக பகுதி பிரிப்புக்கள் | 20% |
| நுகரத்தக்கதல்லாதவை | 10% |

**3.2.1** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வினைக் கணிப்பீடு செய்கின்றது.

**3.2.2** நூலக புத்தகங்களுக்கு பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுவதில்லை.

**3.2.3** குறித்த ஆண்டுடன் தொடர்புடைய பெறுமானத் தேய்வுப் பெறுமதியானது நீடித்த வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

3.3 **கட்டிடத் தொகுதி - குருநாகல்**

பாவனையாளர் அலுவல்கள் அதகாரசபையின் குருநாகல் மாவட்ட அலுவகத்திற்கென குருநாகல் மாவட்ட செயலகத்தினால் உரித்தளிக்கப்பட்ட கட்டிடத் தொகுதிக்கான ரூபா. 1 மில்லியன் கொடுப்பனவானது 40 வருட காலப்பகுதிக்கு சமமான தவணைக் கட்டணங்களில் கொடுப்பனவு செய்யும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 3.4 கடன்பட்டோரும் பெறத்தக்கவைகளும்

கடன்பட்டோர் மற்றும் பெறத்தக்கவைகள் அவை தேறக்கூடிய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படுகின்ற தொகையில் குறிப்பிடப்படுகின்றன.
கையிருப்புக்கள் அவற்றின் கொள்விலை அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் எது குறைவோ அந்தப் பெறுமதியில் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகின்றன.

### 3.5. காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் குறுகிய கால முதலீடு என்பவற்றினைக் குறிப்பிடுகின்றது.

**3.5.1** காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு மற்றும் வங்கிகளிலுள்ள காசு என்பவற்றினைக் குறிப்பிடுகின்றன.

### 3.6. நிலையான சொத்துக்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் முதலீட்டின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது கடந்தக காலங்களில் நிலையான சொத்துக்களினை குறித்த காலப்பகுதியினுள் மீளப் பெறுவதில்லையென்பதால் பெரும்பாலான நிலையான சொத்துக்கள் குறைந்தது 3 வருடங்களேனும் தொடர்ந்து இருக்குமென கருதப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் ஆரம்பத்தில் கொள்விலையிலேயே கணிப்பீடு செய்யப்படுகின்றன.

## 4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 4.1 செலுத்தத்தக்கவைகள்

செலுத்தத்தக்கவைகள் அவற்றின் கொள்விலையில் தரப்படுகின்றன.

### 4.2 இழைப்பாறல் பயன் கடப்பாடு

பாவனயாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பங்களிப்புச் செய்யப்பட வேண்டிய இரண்டு வரையறுக்கப்பட்ட பயன்களைக் கொண்ட இழைப்பாறல் திட்டங்களைக் கொண்டுள்ளது.

### 4.2.1 வரையறுக்கப்பட்ட இழைப்பாறல் திட்டம் – பணிக்கொடை

பணிக்காடையானது ஓர் வரையறுக்கப்பட்ட இழைப்பாறல் திட்டமாகும். அதிகாரசபையானது இயைபான நியதிச்சட்டங்களின் நியதிகளின்படி பணிக்கொடையினைச் செலுத்துவதற்குப் பொறுப்பு வாய்ந்ததாகும். இந்தப் பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு சேவையின் முதலாவது ஆண்டிலிருந்து ஆரம்பித்து சேவை நிறைவடையும் ஒவ்வொரு ஆண்டுக்கும் அனைத்து ஊழயர்களினதும் நிதியாண்டின் இறுதி மாதத்தின் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட தொகைக்குச் சமமான தொகை ஐந்தொகையில் முன்கொண்டு வரப்படுகின்றது. ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டு வரப்பட்ட ஏற்பாட்டுக்கும் ஆண்டின் இறுதியில் முன்கொண்டு செல்லப்படுகின்ற ஏற்பாட்டுக்கும் இடையிலான வேறுபாட்டின் விளைவானது வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றது.

**பணிக்காடைகான ஏற்பாடானது** பணிக் கொடைச் சட்டத்தின் நியதிகளின்படி, ஒரு வருட சேவைக்காலத்தினுள் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்காக கணிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2017.12.31 இலுள்ளவாறு 1 வருட காலப்பகுதிக்கு மேற்பட்ட காலப்பகுதியினைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கான திரண்ட ஏற்பாடு, ரூபா. 50,070,724.80. ஆகும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பணிக்கொடை ஏற்பாட்டிற்கு முதலீடு செய்வதற்கான அங்கீகாரத்தினை வேறாகப் பெற்றுள்ளதுடன் பணிக்கொடைக்கான முதலீடு ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள ஊழியர்களுக்கு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2017.12.31 இலுள்ளவாறான பணிக்கொடை முதலீட்டுப் பொழிப்பானது கீழே தரப்படுகின்றதுடன் மீதியானது முதலீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| 31.12.2017 இல் உள்ளபடியான 5 வருடத்திற்கு மேற்பட்ட ஊழியர்களின் சேவைக்கான பணிகொடை ஏற்பாடு | 42,648,334.47 |
| 2016.01.01 இல் மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 17,679,313.40 |
| 2017 இற்கான முதலீட்டுக்கு கிடைக்கக்கூடிய ஏற்பாடு<br>2018/01/30 இல் 2017 இற்காக முதலீடு செய்யப்பட்டவை | 8,000,000.00 |
| **மொத்த முதலீடு** | **25,679,313.47** |
| 2017.12.31 இல் முதலீடு செய்யப்பட வேண்டிய மீதி | **16,969,021.00** |

பொதுத் திறைசேரியினால் முதலீட்டுக்காக போதுமான நிதி விடுவிக்கப்படாமையினால் முதலீடு செய்யப்பட வேண்டிய திரட்டு மீதியானது கிடைக்கக்கூடியதாக உள்ளது.

### 4.2.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் / ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

அனைத்து ஊழியர்களும் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிக்கு உரித்துடையவர்களாவர். ஊழியர்களினால் பங்களிப்புச் செய்யப்படும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்பானது வருமானக் கூற்றில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபையானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு ஊழியரின் மொத்த உழைப்பூதியத்தில் முறையே 15% மற்றும் 3% பங்களிப்பினை வழங்குகின்றது.

## 4.3 எதிர்பாராத பொறுப்புக்கள்

2017.12.31 இலுள்ளவாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கெதிராக 47 நீதிமன்ற வழக்குகள் உள்ளதுடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவின்படியான அத்தகைய வழக்குகள் பின்வருமாறு.

| பிரிவு | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 13, 30 | 33 |
| 20(5), 10(1),12(1) | 14 |

இத்தகைய வழக்குகளில் பெரும்பாலானவை பாவனையாளர்களின் சார்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்டவையாகும். அவற்றுள் வில வழக்குகள் பாவனையளார் அலுவல்கள் அதிகாரசபையினால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் அல்லது வர்த்தமானியின் பிரிவுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், பாதிப்புக்குள்ளான தரப்புக்களில் பெரும்பாலானவை அதிகாரசபையின் தீர்மானம், திருத்தம் அல்லது பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களினை இரத்துச் செய்தல் என்பவற்றினை மீளப் பெறுவதற்கு எதிர்பார்ப்பதால் எதிர்பாராத பொறுப்புக்களின் பெறுமதியானது சரியான முறையில் கணிப்பீடு செய்யப்படவில்லை.

**4.4** தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பன 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு மிகை ஊதியத்தினைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன. இந்தக் கொடுப்பனவானது நடைமுறை ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அங்கீகாரம் உறுதிப்படுத்தப்படாமையினால் ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவானது தற்போது முன்னைய ஆண்டு சீராக்கலுக்கமைவாக சீராக்கப்பட்டுள்ளது.

## 5. வருமானம்

### இறைவரி அங்கீகாரம்

இறைவரி வருமானமானது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு சென்றடையும் சாத்தியப்பாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றதுடன் இறைவரி வருமானமானது நம்பகமாக அளவிடப்படக் கூடியதொன்றாகும்.

### வட்டி வருமானம்

நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானமானது பெயரளவிலான வட்டி வீதத்தினைப் (NIR) பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்றது. நிலையான சொத்துக்களின் சராசரி வட்டி வீதம் 11% ஆகும். ஆகையால், ஆண்டுக்கான வட்டி வீதம் முன்னைய ஆண்டிலும் பார்க்க அதிகமாகும்.

### அரசாங்க மானியங்கள்

கொடைகள் கிடைக்கப்பெறும் என்பதற்கான நியாயமான உறுதியுரை மற்றும் அதனுடன் இணைந்த நிபந்தனைகள் இணங்கியொழுகப்படும் என்பன உள்ள இடங்களில் அரசாங்க மானியங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. செலவின விடயம் (மீண்டுவரும் மானியம்) ஒன்றுடன் மானியங்கள் தொடர்புறும் வேளையில், அது அக்காலப்பகுதிக்கான வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. சொத்து

விடயத்துடன் (மூலதன மானியம்) மானியங்கள் தொடர்புறுகின்ற போது அதன் நீடித்த வருமானமாகவும் சம்பந்தப்பட்ட சொத்தின் ஆயுட் காலத்தின் போது சமவளவில் விடுவிக்கப்பட்ட வருமானமாகவும் அங்கீகரிக்கப்படுகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாசபை நாணயமல்லாத கொடைகளினைப் பெறுகின்ற போது, சொத்துக்களும் கொடைகளும் பெயரளவிலான தொகைகளில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்டு, சொத்தின் (ஐஏஎஸ் 20) எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலத்திற்கெதிராக வருமானக் கூற்றில் விடுவிக்கப்பட்டுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } டீசீஎம்/டீ/சீஏஏ/1/17

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 யூலை 31

தலைவர்,

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

**பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புரைகளும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை 2018 யூன் 21 ஆந் திகதியன்று அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்தப்படக்கூடிய நிலைமையை எய்தியதன் பின்னரே அதற்கான தேய்மானமும் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அதிகாரசபையை வந்தடையாத ரூபா 2,827,431 பெறுமதியான நடைமுறையல்லாத சொத்துக்களுக்கு ரூபா 282,743 தேய்மானமாகக் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

ஊழியர் நலன்களுக்கான பிற்கால நிதியேற்பாடு சம்பந்தமான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 3 முதல் 9 வரையிலானவற்றின் பிரகாரமும் 15 ஆம் பந்தியின் பிரகாரமும் சேவையின் பின்னரான ஊழியர்களது நலன்களுக்கான நிதியேற்பாடு சம்பந்தமாக நிறுவனங்களது மிக அண்மைய கால வெளியீடுகளின் பிரகாரம் எதிர்கால ஊழியர் சம்பள அதிகரிப்பு, ஊழியர் புரள்வு மற்றும் ஏனைய

ஆயுட் கணிப்பு கொள்கையொன்றைக் கற்பனை அடிப்படையில் தயாரிக்க வேண்டுமாயினும், அவ்வாறானதொரு கொள்கையைத் தயாரித்திருக்கவில்லை. எனினும், ஊழியர்கள் இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் சேவைக் காலம் என்பவற்றினது அடிப்படையில் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அப்பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான நிதியேற்பாடு ரூபா 1,583,778 குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டினது மிகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அலுவலக உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பன ரூபா 3,518,530 அதிகரித்த கிரயத்துடன் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தன.

(ஆ) 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளின் பொருட்டு 2017 மே 30 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்ட ஊழியர் மிகையூதியம் ரூபா 12,011,000 ஆகும். இதனை முன்னைய ஆண்டுகளது இலாபத்தில் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டினது செலவினமாகக் காட்டியமையால், மீளாய்வாண்டினது இலாபம் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான ஊழியர் மிகையூதியத்திற்கான மதிப்பீட்டினைத் தயாரித்து நிதியேற்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையினது XXIV அத்தியாயத்தின் 4.5 | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 881,760 |

| | |
|---|---|
| ஆம் பிரிவு | கூட்டுத் தொகையையுடைய கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரின் நிதிப்பிரமாணம் 371(2) | முற்பணத்தைப் பெற்றதற்கான பணி முடிவடைந்ததும் அதனைத் தீர்த்து வைக்க வேண்டுமாயினும், மனித வளக் கணக்காய்விற்கென தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய ரூபா 219,000 முற்பணமானது 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் தீர்த்துவைக்கப்படாதிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அதிகார சபையினது மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 50,830,861 மிகையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,660,137 ஆகும். இதனால் நிதிப் பெறுபேற்றில் ரூபா 44,170,724 அதிகரிப்புக் காணப்பட்டது. மீண்டுவரும் மானியம் ரூபா 88,652,320 அதிகரித்தமையும் ஆளுக்குரிய வேதனம், ஏனைய செயற்பாட்டுச் செலவினம் மற்றும் கட்டிட வாடகை என்பன முறையே ரூபா 34,361,943, ரூபா 8,764,413, ரூபா 6,685,806 என அதிகரித்தமையும் இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக மிகை நிலவியபோதும் அது வருடாந்தம் மாற்றங்களுக்குள்ளாகியிருந்தது. ஊழியர்களது ஊழியத்தையும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தையும் நிதிப் பெறுபேற்றில் மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 190,252,253 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 343,944,401 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பாடசாலைச் சிறுவர்களுக்கு விழிப்பூட்டும் 300 நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கலாக 600 நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 8,474,299 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது அந்நிகழ்ச்சித் திட்டங்களுள் 105 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் 03 மாவட்டங்களில் பாடசாலைச் சிறுவர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவுமே நடைபெறவுமில்லை.

(ஆ) பாடசாலைச் சிறுவர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் குறித்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கும் விதத்திலும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்குமாறும் பாடசாலைச் சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு அமுல்படுத்தியிருக்கவில்லை.

(இ) 2007 யூலை 11 ஆந் திகதிய 1505/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பண்டங்களை விற்பனை செய்யும் சகல இறக்குமதியாளர்களும் விநியோகத்தர்களும் அதற்கமைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா என்பதைப் பரிசீலிப்பதற்கு அதிகார சபை ஆய்வினை மேற்கொண்டிருந்தது. அதன்போது, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பண்டங்களது இறக்குமதியாளர்களதும் விநியோகத்தர்களதும் விபரம் குறிப்பிடப்பட்டிராமையும், அதி கூடிய சில்லறை விலையை குறிப்பிட்டிராமையும், சில பண்டங்களது விலைகளின் அடிப்படையில் கடையுரிமையாளர்கள் மீண்டும் விலைகளைக் குறிப்பிட்டிருந்தமையும் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டதால், மேற்படி வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டதுடன், அக்கட்டளைகளை அமுல்படுத்துவது சம்பந்தமாக அதிகார சபை போதியளவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவுமில்லை.

(ஈ) அதிகார சபையை அமைப்பதற்குரிய அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் அதிகார சபைக்குக் கிடைக்கப் பெறும் புகார்களைத் தீர்த்து வைப்பது சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதிகார சபைக்குக் கிடைக்கப்பெறும் புகார்கள் மற்றும் அவற்றைத் தீர்த்து வைத்தல் என்பன தொடர்பாக முறையான பதிவேடுகளோ தரவு முறைமையோ பேணப்படாமையால் தீர்த்து வைக்கப்படாத புகார்கள் தொடர்பாகவும் தீர்த்து வைப்பதில் நிலவும் காலதாமதம் தொடர்பாகவும் பரிசீலிக்க முடியாதுள்ளதுடன் பாவனையாளர்கள் சுரண்டப்படுவதற்கு எதிராக நிவாரணத்தை வழங்குவதற்கும் பாவனையார்களது உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் தீங்கு விளைவிக்கும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு எதிராகப் பாவனையாளர்களைப் பாதுகாப்பது போன்ற அதிகார சபையின் நோக்கமும் நிறைவேறுவதில் தடை ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(உ) 2008 ஆம் ஆண்டு முதல் அரிசியானது குறிப்பிடத்தக்க பண்டமாகப் பெயரிடப்பட்டிருந்தபோதும், அதிகாரச்சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் பிரகாரம் 3 வகை அரிசிகளின் பொருட்டு அவ்வவ்போது அதி கூடிய சில்லறை விலைகளை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தல்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. 2017 டிசெம்பர் 26 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2051/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 1 கிலோ கிராம் நாட்டரிசியின் அதிகூடிய விலை மாத்திரமே நிர்ணயிக்கப்பட்டதால் ஏனைய வகை அரிசிகளின் சில்லறை விலைகள் கட்டுப்பாட்டுக்கு உட்படாது போயிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின்போது அதிகார சபை விற்பனைக் கூடங்களில் மேற்கொண்ட மொத்த சுற்றி வளைப்புகள் 25,605 ஆகும். இவற்றுள் 38 சதவீதமானவை பண்டங்களது விலைகளைக் குறிப்பிடுதல், லேபல் இடல், பக்கெட்டுக்களில் அடைத்தல் சம்பந்தப்பட்டனவாகவும் 26.98 சதவீதமானவை விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படாமையும் சம்பந்தப்பட்டனவாகும். எவ்வாறாயினும், குறிப்பிட்ட விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தல், பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்குரிய நியமங்களும் வடிவங்களும், குறிப்பிடத்தக்க பண்டங்களதும் சேவைகளதும் விலைகள் மற்றும் அதி கூடிய விலை நிர்ணயிக்கப்பட்ட பண்டத்தை விற்பனை செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மொத்த சுற்றிவளைப்புகள் 4.08, 0.48, 0.06, 9.1 எனக் குறைந்த சதவீதத்திலேயே அமைந்திருந்தன. மேலும், அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தகரால் விளம்பரப் பலகை வழங்கப்படுதல் சம்பந்தமான சுற்றிவிளைப்புகள் எதுவுமே நடைபெறவில்லை.

(எ) 2016, 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளில் முறையே 201 மற்றும் 434 சுற்றிவளைப்புகள் சம்பந்தமாக வழக்குகள் தொடரப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்ட மதியுரையாளர்களுக்குச் சம்பளமும் படியும் வழங்குவது சட்டபூர்வமற்றதாகும் என முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய DMS/1736/VOL1 எனும் கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியிருந்தபோதும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2016 ஆம் ஆண்டில் 05 மதியுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2015 ஏப்ரல் 01 ஆந் திகதிய அமப/15/0180/613/008 எனும் இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் அம்மதியுரையாளர்கள் நியமனஞ் செய்யப்பட்ட நாள் தொடக்கம் 2017 டிசெம்பர் 31 வரை மதியுரையாளர்களுக்கான படி, எரிபொருளுக்கான படி, போக்குவரத்துப் படி என ரூபா 5,490,720 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கான அமைச்சினது வாகனமொன்றைப் பழுதுபார்ப்பதற்கு அதிகார சபை 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,275,187 செலவிட்டிருந்தபோதும், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1 (அ) பந்தியின் பிரகாரம் அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 08 மாதங்கள் மாத்திரமே அவ்வாகனத்தைப் பயன்படுத்தியதன் பின்னர் மீண்டும் அது அவ்வமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2017 யூன் 15 ஆந் திகதிய CAA/HRA/VEH/24 எனும் இலக்கமுடைய கடிதத்தின்படி இப்பழுதுபார்த்தலுக்கான செலவினம் அமைச்சினால் மீள நிரப்பப்படுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினம் வரை அமைச்சிடமிருந்து அச்செலவினம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பல்வேறு காரணங்களின் நிமித்தம் அதிகார சபை அறவிடும் தண்டப் பணம் சம்பந்தமாக நீதிமன்றங்களிலிருந்து பெறப்படும் ஆவணங்களையும் நிறுவனம் பேணிவரும் பதிவேடுகளையும் வெவ்வேறாக இனங்காண முடியாதிருந்தமையால் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் இனங்காண முடியாது போன தண்டப் பண மீதி ரூபா 796,003 முதல் ரூபா 10,006,585 வரை அதிகரித்திருந்ததுடன், பெற வேண்டிய தண்டப் பண மீதி ரூபா 4,229,491 முதல் ரூபா 14,635,071 வரை அதிகரித்துமிருந்தது.

## 4.4 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடுவித்தல் அடிப்படையிலும் பதில் கடமை அடிப்படையிலும் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2010 மார்ச் 25 முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டங்களில் உள்ள விற்பனைக் கூடங்களது எண்ணிக்கை மற்றும் சனத்தொகை எண்ணிக்கை எனும் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட வேண்டிய விசாரணை உத்தியோகத்தர்களது எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், 2018 மார்ச் 28 ஆந் திகதியளவில் 06 மாவட்டங்களில் 87 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் ஏனைய 06 மாவட்டங்களில் 92 உத்தியோகத்தர்கள் குறைவாகவும் இருந்தனர்.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

## 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியை எய்துதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான "நிகழ்ச்சி நிரலின்" பிரகாரம் அதிகார சபை தனது நோக்கமாகவும் இலக்காகவும் முறையே "பொறுப்புடனான பாவனை மற்றும் உற்பத்தி", "தரம்மிக்க பண்டங்களையும் உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும்" போன்ற நோக்கங்களை இனங்கண்டுகொண்டிருந்ததுடன், அந்த நோக்கங்களையும் இலக்கையும்

அளவிடுவதற்கான சுட்டிக் காட்டிகள், அமைப்பு மற்றும் தரவுகளுக்கான தளங்களை அதிகார சபை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 ஆண்டிறிக்கைகளைப் பராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கையைப் பராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை அதிகார சபை கணக்காய்வுத் தினம் வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் உள்ள குறைபாடுகள் அவ்வவ்போது அதிகார சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமை மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) ஊழியர் கடன் அறவீடு | ஊழியர் கடனை அறவிடுவதில் தாபன விதிக் கோவையைக் கடைப்படிக்காமை, ஊழியர் கடன் காலப்பகுப்பாய்வைத் தயாரிக்காமை. |
| (ஆ) தண்டப் பணச் சேகரிப்பு | தண்டப் பணச் சேகரிப்பு நாளதுவரையாக்கப்படாமை. |
| (இ) உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் | சகல உத்தியோகத்தர்களையும் உள்ளடக்குமாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்காமை. |

| | |
|---|---|
| (ஈ) புகார்களைத் தீர்த்து வைத்தல் | புகார்களுக்கான ஆவணங்கள் பூரணப்படுத்தப்படாதும் நாளதுவரையாக்கப்படாதுமிருத்தல், புகார்களைத் தீர்த்து வைப்பதில் தாமதம் மற்றும் வருடாந்த இலக்குகளை ஏற்படுத்தாதிருத்தல் |

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (2) (இ) இன் கீழ் 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் கருத்துரைகள்.**

**2.2.1 இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமம் 07**

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு வழுக்கள் தற்போது சீர் செய்யப்பட்டுள்ளதுடன் அவை 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கணக்கீட்டினூடாக சமர்ப்பிக்கப்படும்.

**2.2.2 கணக்கீட்டு வழுக்கள்**

ஊழியர்களின் நலன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளினைக் கணிப்பீடு செய்வதிலுள்ள வழுவானது சரி செய்யப்பட்டதுடன் அது 2018 நிதிக் கணக்கினூடாக சமர்ப்பிக்கப்படும்.

**2.2.3 கணக்காய்விற்கான போதிய ஆதாரமின்மை**

(அ) வாகனங்களின் தேய்மானம் மீதான வழுக்கள் திருத்தியமைக்கப்பட்டுடன் அவை 2018 நிதிக் கணக்கீட்டினூடாக சமர்ப்பிக்கப்படும்.

(ஆ) இத்தகைய வழுக்களினைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளினை எடுக்குமாறு அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**2.2.4 நியதிகள் மற்றும் நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

(அ) 2018/06/07 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் 10 ஊழியர்களில் 6 பேர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் செலுத்த வேண்டிய தொகையானது அவர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் xxiv இன் பிரிவு 4.5 இன் நியதிகளின்படி, ஏனைய நான்கு ஊழியர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டி தொகை தொடர்பில் கணக்காய்வு செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணம்**

இன்னமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால், மனித வள கணக்காய்விற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் தவிர்ந்த அனைத்து முற்பணங்களும் ஏற்கனவே கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளன.

**4. தொழிற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

**4.1.1 திட்டமிடல்**

(அ) 2017 ஆம் ஆண்டின் செயல்திட்டத்தின்படி, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையானது குறைவாக இருந்த போதிலும், குறித்த ஆண்டில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கு பாவனையாளர் சமூகத்தினை நோக்கியதாக அமைந்திருந்தமையினை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினமானது அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பங்குபெறுதலுடன் 2017 மார்ச் 15 ஆம்

திகதியன்று தாமரைத் தடாக அரங்கத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டுள்ளதுடன் இந்நிகழ்வில் ஏனைய துறைகளினைச் சார்ந்த அமைச்சர்கள், ஆளுநர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் பாதுகாப்புத் துறையின் பிரதானிகள், அரச மற்றும் தனியார் துறையினைச் சார்ந்த சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாவனையாளர்கள் உள்ளடங்கலான பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள். சர்வதேச பாவனையாளர் நிறுவகத்தின் ஆசியப் பிராந்திய நிரந்தரப் பிரதிநிதி விசேட பேச்சாளராக இந்நிகழ்வில் கலந்து கொண்டார். இந்நிகழ்வினை முன்னிட்டு நாடு பூராகவும் ஒளிப்படம் தயாரித்தல், கட்டுரை எழுதுதல் மற்றும் குறுஞ் செய்திகளினை அனுப்புதல் போன்ற பல்வேறு திற்நத போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்பட்டன. மேலும், இந்த நிகழ்வு குறித்து அரச மற்றும் தனியார் இலத்திரனியல் மற்றும் சமூக இணையத்தள வலையமைப்புக்களினூடாகவும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

மாவட்ட மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளினை முன்னெடுப்பதற்குப் போதுமான அலுவலர்கள் இல்லாமையினால் பல மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடிந்திருக்கவில்லை. புதிய புலனாய்வு அலுவலர்கள் தற்போது மாவட்ட அலுவலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதிகாரசபையின் கணக்காய்வுக் குழுக்களில் இது தொடர்பில் கலந்துரையாடல்களும் இடம்பெற்றுள்ளன.

(ஆ) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 இல் புதிய வடிவத்தினைப் பெற்றுள்ளதுடன் அவை பெருமளவிலான பங்குபற்றாளர்கிளன் பங்குபற்றுதலுடன் பல்வேறு தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கென நியமிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களினை வழங்குபவர்களின் வழிகாட்டுதலின் கீழ் குறிப்பாக கம்பஹா போன்ற மாவட்டங்களில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும், நாடு முழுவதனையும் உள்ளடக்கும் வகையில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினைப் பயன்படுத்தி குறைந்த செலவில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிகள் தொடர்பில் பல்வேறு மக்களுக்கும் விழிப்புணர்வு ஊட்டப்பட்டது.

(இ) ஆகக்கூடிய சில்லறை விலையினை சான்றுப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கு 2017 இல் இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து ஏறக்குறைய 326 விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. சந்தையில் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விலைகள் உண்மையிலேயே அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதனை ஆய்வு செய்யும் கடமைப் பொறுப்பானது புலனாய்வு உத்தியோகத்தர்களினைக் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இந்த விடயத்திற்கு ஏற்கனவே தீர்வும் காணப்பட்டுள்ளது.

(ஈ) அதிகாரசபை மீது மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பான தகவல்களைப் பதிவு செய்வதற்கு உரிய ஆவணங்கள் பேணப்படுகின்றதுடன் முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதம் குறித்த தகவல்களும் வழங்கப்படுகின்றன. அதற்கிணங்க, முறைப்பாடுகளுக்குரிய தீர்வுகளினைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் தாமதத்திற்குரிய காரணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். எவ்வாறாயினும், சட்டப் பிரிவானது இந்தப் பணியினை விரைவாகச் செய்யும் வகையில் பொருத்தமான கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தினைக் கொண்டிருக்கவில்லை.

(உ) 2008 இலிருந்து அரிசியானது விதித்துரைக்கப்பட்ட பண்டமாக இருந்து வருகின்ற போதிலும், பணிப்பாளர் நாயகமானவர் ஆகக்கூடிய சில்லறை விலையினை நிர்ணயிக்கின்ற போது, சட்டத்தின் பிரிவு 19 இன் கீழான ஏற்பாடுகளின் நியதிகளின் கீழ் அதிகாரசபையிடமும் பாவனையாளர் அலுவல்கள் பேரவையிடமும் அது குறித்து வினாவுவார். அதற்கிணங்க, உரிய வர்த்தமானி அறிவித்தல்கள் பேரவையின் பரிந்துரை மற்றும் அதிகாரசபையின் அங்கீகாரம் என்பவற்றிற்கு இணங்க மட்டுமே, சட்டப் பிரிவினால் வெளியீடு செய்யப்படுகின்றன.

(ஊ) குறிப்பிட்ட காலப்பகுதியில் அடையாளங்காணப்பட்ட சமூக பொருளாதார பிரச்சனைகளின்படி, திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதால், சட்டத்தின் பிரிவுகளின் நியதிகளின்படி, வீதாசாரம் மற்றும் ஒப்பீட்டின் அடிப்படையில் திடீர் சோதனைகளினை மேற்கொள்வது பொருத்தமற்றதாகும்.

(எ) பண்டங்களின் மாதிரிகளினைப் பெற்றுக் கொள்வது, 2017 இல் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் திடீர் சோதனைகளாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால், எதிர்காலத்தில் மாதிரிகளினைப் பெற்றுக் கொள்வதற்கென தனியானதொரு ஆவணம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இந்தப் பிரச்சனைக்கு எதிர்காலத்தில் தீர்வு காணப்படும்.

2017 இல் நடாத்தப்பட்ட திடீர் சோதனைகளுக்கான வழக்குகளினை விரைவாகத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகளினை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்ட போதிலும், இதுவரையில் எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 <u>முகாமைத்துவ செயற்பாடுகள்</u>

(அ) விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ. அமைச்சரினாலும் பணிப்பாளர் சபையினாலும் சட்டத்தின் பிரிவு 53 இன் நியதிகளின்படி, ஆலோசகர்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அனைத்து நியமனங்களும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் தீர்மானம் வழங்கப்படும் வரையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் பணிப்பாளர் சபையின் முடிவு குறித்தும் கவனம் செலுத்தப்படும். இது தொடர்பில் தெளிவான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறித்துரைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான முடிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமானது புத்தாக்கம் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
அமைச்சிலிருந்து பெறப்பட்ட புத்தாக்கம் தொடர்பான கொடுப்பனவுகளினை மீள்நிதியிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.3 <u>தொழிற்பாட்டு நடவடிக்கைகள்</u>

## 4.4 <u>பதவியினர் முகாமைத்துவம்</u>

(அ) இந்த வழுவினைத் திருத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) மாவட்டங்களிலுள்ள அலுவலர்களின் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பான பிரச்சனைகளினைத் தவிர்க்கும் வகையில் சரியான முறையில் அலுவலர்களினை ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது மேற்குறித்த பிரச்சனைக்குத் தீர்வாக அமையும்.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளினை அடைதல்

அதிகாரசபையின் கூட்டிணைவு திட்டம் மற்றும் வருடாந்த செயல்திட்டம் என்பவற்றினைத் தயாரிக்கும் போது இத்தகைய விடயங்களினைக் கவனத்தில் எடுப்பதனூடாக நிலையான அபிவிருத்தி இலக்குகளினை அடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதிகாரசபைச் சட்டத்தின் நியதிகளின்படி பணிப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 6. கணக்கீடும் நல்லாட்சியும்

### 6.1 கணக்குகளினைச் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 ஆம் திகதிய PED/12 சமவிலக்கம் கொண்ட பொது தொழில்முயற்சிகள் சுற்றிக்கை பிரிவு 6.5.3 இன் நியதிகளின்படி, வருடாந்த அறிக்கையானது, நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதிகாரசபையானது 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையினை கணக்காய்வுத் திகதியிலேனும் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான வழுக்கள் அதிகாரசபையின் தவிசாளரின் கவனத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு விடயங்கள் | அவதானங்கள் |
| --- | --- |
| (அ) ஊழியர்களின் கடன்களை அறவீடு செய்தல் | கணக்குகளைச் சரியாகப் பதிவு செய்தல். |
| (ஆ) தண்டப் பணங்களை அறவீடு செய்தல் | தாபனவிதிக் கோவையின் பிரிவுகளின் நியதிகளின்படி, சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களின் மீதான சட்ட ரீதியான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. |

**கலாநிதிலலித் என் சேனாவீர .**

தவிசாளர்.